**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**C.C. 322/2024**
**Prosecution Witness : 7**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. ராஜா** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. பழனிமுத்து** | **Calling** | : | **விவசாயம்** |
| **Village** | : | **பூதிப்புரம்** | **Religion** | : | **இந்து** |
| **District** | : | **திண்டுக்கல்** | **Age** | : | 50 |
| | | | **Dated** | : | 11.02.2026 |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 7 (பட்டியல் சாட்சி 6), **திரு. ராஜா** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். என்னுடன் தங்கவேலு என்பவரும் கையொப்பம் செய்தார். 07.05.2024ம் தேதி மதியம் 12.30 மணியளவில் அஞ்சலி ரவுண்டானா அருகே நானும், தங்கவேலும் நின்று கொண்டு இருந்தபோது, தாடிக்கொம்பு காவல் நிலைய போலீசார் வினோத்குமார் விபத்து வழக்கில் வரைபடம் வரைந்து விசாரணை செய்தார்கள். விசாரணைக்கு வந்ததற்காக சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். **மேற்படி பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது**

**கையொப்பம் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

சண்முகம் மகன் வினோத்குமார் எங்கள் ஊர்க்காரரர் என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கும், அவர்களது வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும். சண்முகம் எனக்கு சித்தப்பா முறை வேண்டும். விசாரணைக்காக தாடிக்கொம்பு காவல் நிலையத்திற்கு போனேனா என்று கேட்டால், இல்லை, சம்பவ இடத்தில்தான் போலீசார் விசாரித்தார்கள். விபத்து நடந்த அன்றே போலீசார் விசாரித்தார்கள். விபத்து நடந்த தேதி என்ன என்று கேட்டால், 07.05.2024. அன்று தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். பார்வை மகஜரில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்குத் தெரியாது என்றால் சரியல்ல, நான் படித்துப் பார்த்துத்தான் கையொப்பம் செய்தேன். பார்வை மகஜரில் மேம்பாலத்திற்கு கிழக்கு பக்கமாக என்ன உள்ளது என்று கண்டுள்ளது என்று கேட்டார், கடை உள்ளது. பார்வை மகஜரில் பள்ளிக்கூடம் உள்ளதாக கண்டுள்ளது என்றாலும், நான் உண்மையில் பார்வை மகஜரை பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. இறந்துபோனவர் என்னுடைய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னது போன்று சொன்ன நேரத்தில், சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும், கையொப்பம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**Taken down by me/before me in open court on 11.02.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.**

V DEEPA
Digitally signed by V DEEPA
Date: 2026.02.11 18:24:28 +0530

**Chief Judicial Magistrate,**
**Dindigul.**